**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 29.08.2025.**
**MACOP.No. 555/2021.**

**ம.சா. 1 திருமதி. தனலட்சுமி, க/பெ. நாகராஜ்.**

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

விபத்து நடந்தது நேரான மெயின் ரோடு என்றால் சரிதான். இருசக்கர வாகனம் எனக்கு பின்புறம் வந்தது என்றால் சரிதான். நான் எனக்கு பின்புறமாக வந்த இருசக்கர வாகனத்தை கவனிக்காமல் வடக்கில் இருந்து தெற்காக சாலையைக் கடந்ததால் தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது கவனக்குறைவினால் மட்டுமே நடந்தது என்றால் சரியல்ல. எனக்கு மருத்துவ செலவாக ரூ. 50,000/- செலவானதற்கு மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், நான் அது போல் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன் என்றால் சரிதான். நான் சிகிச்சை எடுத்தற்குரிய காயச்சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய காயச்சான்றிதழை தாக்கல் செய்தால் தான் எனக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை தெரிய வரும் என்றால் சரியல்ல.

நான் 21.09.2020 முதல் 29.09.2020 வரை 9 நாட்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். அங்கேயே எனக்கு அறுவை சிகிச்சை முடிந்துவிட்டது என்றால் சரிதான். 21.10.2020ம் தேதி நான் மீண்டும் எதற்காக சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால், கொரானா காலம் என்பதால் என்னை வீட்டிற்கு அனுப்பிவிட்டு

மீண்டும் மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் 2-ம் முறையாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது, இந்த விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு என்றால் சரியல்ல. இந்த விபத்தின் காரணமாக எனக்கு எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றாலும், நான் வேலைக்கு போய் வந்து கொண்டு இருக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு கணிக்கப்பட்ட ஊனத்தின் தன்மையை அதிகப்படுத்தி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது கவனக்குறைவினால் ஏற்பட்டது என்பதால் 2-ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 29.08.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.